# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 22 2023

Weekly E-paper ● April 22, 2023



# தந்தை பெரியாரும் பசும்பொன் தேவரும்!

சுப.வீரபாண்டியன்

## ஆளுநர்களின் அத்துமீறலைத் தடுக்கும் ஆளுமை மு.க.ஸ்டாலின் !

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## தமிழ்நாடு அமைதி பூங்காதான்!

தலையங்கம்

## தன்பாலின ஈர்ப்பும், மாநில சுயாட்சியும்..!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 22 2023 Weekly E-paper ● April 22, 2023


# தந்தை பெரியாரும் பசும்பொன் தேவரும்!

**சுப.வீரபாண்டியன்**

“சொத்துகளை எல்லாம் நாட்டிற்கு எழுதிக் கொடுத்து விட்டுப் போன பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஒரு சாதியத் தலைவராம்..... தன் சொத்தைப் பாதுகாக்க எழுபது வயதில் திருமணம் செய்து கொண்ட பெரியார் புரட்சியாளராம்!” என்று ஒருவர் அண்மையில் கேலி பேசி இருக்கிறார். இதன் பொருள், தேவர் தியாகி என்பதும் பெரியார் சுயநலவாதி என்பதும்தான்!

ஈரோடு இடைத்தேர்தலின் போது, களத்தில் முதலில் நின்றதால் முதலியார் என்றும் (பாவாணருக்கே தெரியாத மொழியியல் ஆய்வு இது), அருந்ததியர்கள் வந்தேறிகள் என்றும் பேசியவரும் இவர்தான்! அருந்ததியர்களுக்கு மூன்று சதவீதஉள் ஒதுக்கீட்டைக் கருணாநிதி எப்படி கொடுக்கலாம் என்று நியாயம் கேட்ட வரும். OBC என்பதற்கு outside the backward class என்று விளக்கம் சொன்ன அறிஞரும் இவர்தான்!

பெரியாருக்கும், பசும்பொன் தேவருக்கும் இப்போது என்ன முரண்பாடு வந்தது? முதலியார்களுக்கும், அருந்ததியர்களுக்கும் அப்படி என்ன மோதல் நிகழ்ந்துவிட்டது? இவை குறித்து எல்லாம் ஏன் இப்படிச் சிலர் இப்போது பேசுகின்றனர்?

இவை எல்லாம் தற்செயல் நிகழ்வுகளோ, வெறும் உளறல்களோ இல்லை. திட்டமிட்டு, எஜமான விசுவாசத்திற்கு ஏற்ற, சாதிய அரசியலை வளர்த்தெடுக்கும் சதி! தோழர் ஜீவசுந்தரி எழுதியிருப்பதைப் போல, ஒருவர் யாருக்கு வாலாட்டுவது என்பதை தீர்மானித்துக் கொள்ளும் உரிமை அவருக்கு உண்டு. ஆனால் தேவையற்று பெரியாரையும், அருந்ததியர்களையும் இழிவுபடுத்திப் பேசும்போது, எதிர்வினை ஆற்ற வேண்டிய கட்டாயம் வந்தே தீருகிறது!

பெரியாரையும், திராவிடத்தையும் எதிர்ப்பது என்பதுதான் பார்ப்பனியத்தின் அடிப்படைப் பாடம். இந்த இரண்டு சொற்களும்தான் பார்ப்பனியம் இங்கே கோலோச்சுவதற்குத் தடையாக இருக்கின்றன! ஆதலால் அவற்றைக் கடுமையாகத் தாக்கும் ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கங்கள், அவ்வப்போது தமிழ்த் தேசியம் பேசுவோரையும் பயன்படுத்திக் கொள்கின்றன. சிலம்புச் செல்வர் ம. பொ.சி தொடங்கி, இன்று வரையில் ஆள்கள் மாறிக்கொண்டே இருக்கிறார்களே தவிர, பெரியாரை, திராவிடத்தை எதிர்ப்பதற்கு ஆர் எஸ் எஸ் க்கு வேறு வேறு ஆள்கள் கிடைத்துக் கொண்டே இருக்கிறார்கள்!

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற முதுகுளத்தூர் கலவரத்தின் போது, முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள்தான், முத்துராமலிங்கத் தேவர் அவர்களைக் கைது செய்தார். அப்போது இரண்டு கட்சிகளுக்கு இடையில் மட்டுமின்றி, இரண்டு சமூகங்களுக்கு இடையிலும் ஒரு பெரும் மோதல் ஏற்பட்டது. அந்தக் கலவரம் குறித்து, மிக விரிவாக, நெல்லை, மனோண்மணீயம் பல்கலைக்கழகத்தில், வரலாற்றுத் துறைப் பேராசிரியராக இருந்த மணிக்குமார் அவர்கள் விரிவான நூல் ஒன்றை, ஓர் ஆவணம் போல, ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். அந்த நூலைப் படித்துப் பார்த்தால் காமராசருக்கும், தேவருக்கும் இடையில் நடந்த விவாதங்கள் எல்லாம் வெளிப்படையாகத் தெரியும்!



உண்மை நிலை இப்படி இருக்க, காமராசரையும், தேவரையும் ஒப்பிட்டுப் பேசாமல், அவர்களுக்கு இடையில் இருந்த முரண்பாடு பற்றி வாய் திறக்காமல், பெரியாரையும் தேவரையும் மோத விடுவது எதற்காக?

சாதி அரசியலை முன்னெடுத்து, தேர்தலில் நாடார், தேவர் இரண்டு சமூகத்தினரின் வாக்குகளையும் தாங்கள் பெற வேண்டும் அல்லது பாஜகவிற்கு அவற்றை மடை மாற்ற வேண்டும் என்னும் ஒரே நோக்கத்திற் காகத்தான்!

இந்தப் பிழைப்பு பற்றிப் பாரதியார் தன் பாடல் வரி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். அறிந்தவர் அறிவாராக!

●

# ஆளுநர்களின் அத்துமீறலைத் தடுக்கும் ஆளுமை மு.க.ஸ்டாலின் !

வழக்கறிஞர் இராம.வைரமுத்து






பா.ஜ.க அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநரை வைத்து இணை அரசாங்கம் நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு முட்டுக்கட்டை போடும் வேலையை வாடிக்கையாக வைத்துள்ளது ஒன்றிய பா.ஜ.க அரசு. தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி நியமிக்கப்பட்ட நாள் முதல் அவர் அத்தகைய மோதல் போக்கைத்தான் கடைபிடித்து வருகிறார்.

தமிழ்நாட்டின் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 14 சட்ட மசோதாக்களை ஆளுநர் நிலுவையில் வைத்துள்ள நிலையில், “பொறுத்தது போதும் என பொங்கி எழுந்த” தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க, குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்ய ஒன்றிய அரசையும், குடியரசுத் தலைவரையும் வலியுறுத்தி” அரசின் தனித் தீர்மானத்தை 10.04.2023 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் கொண்டு வந்து ஒரு மனதாக நிறைவேற்றினார்.

அதன் எதிரொலியாக அன்றைய தினம் அவை அலுவல் முடிவதற்குள் ஆன்லைன் சூதாட்டத்தைத் தடை செய்யும் தமிழ்நாடு அரசின் சட்ட மசோதாவிற்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அதிரடியால் சென்னை ஆளுநர் மாளிகை மட்டுமின்றித் தெலுங்கானாவும் அதிர்ந்தது. 10 மசோதாக்களை நிலுவையில் வைத்திருந்த தெலுங்கானா ஆளுநர் தமிழிசை அன்றைய தினம் 3 சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தார். 2 மசோதாக்களைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பியதுடன் 2 மசோதாக்களை மாநில அரசின் விளக்கம் கேட்டுத் திருப்பி அனுப்பினார்.

ஆளுநர்களைச் செயல்பட வைக்கும் ஆளுமையாக விளங்கும் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த மசோதாவுக்கு ஆதரவு கேட்டும், இதே போன்ற மசோதாக்களை தங்கள் மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றுமாறு கேட்டும் பா.ஜ.க அல்லாத கட்சிகளைச் சேர்ந்த முதல்வர்களுக்கு 11.04.2023 அன்று கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் “நமது நாட்டில் கூட்டாட்சித் தத்துவம் படிப்படியாக மறைந்து வருவதைக் காண்கிறோம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆளுநர், ஆளுநருடைய கடமைகள் குறித்தும், ஒன்றிய-மாநில அரசுகளின் கடமைகளும் பொறுப்புகளும் வரையறுக்கப்பட்டுள்ள போதிலும் அவை மதிக்கப்படுவதில்லை. இதனால் மாநில அரசின் செயல்பாடுகள் பெரும் பாதிப்படைகிறது. மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்படும் பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் மாநில ஆளுநர்கள் காலவரையறை இன்றி நிலுவையில் வைத்திருக்கின்றனர். இதனால் அந்தந்த மாநில செயல்பாடுகள் குறிப்பிட்ட இடங்களில் முடங்கிப் போய் இருக்கிறது. எனவே அந்தந்த மாநிலங்களில் சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்குக் காலநிர்ணயம் செய்ய வேண்டும் என ஒன்றிய அரசையும், குடியரசுத் தலைவரையும் வலியுறுத்தித் தீர்மானம் இயற்றுவது ஏற்புடையதாக இருக்கும்” எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு வரவேற்பு தெரிவித்து, பதில் கடிதம் எழுதிய டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், இதே போன்ற தீர்மானம் டெல்லி சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் என்று அதில் தெரிவித்திருந்தார்.

கேரள முதல்வர் பினராயி விஜயன், ஆளுநருக்கு எதிரான முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கைக்கு முழு ஆதரவு அளிப்போம் என்று தெரிவித்துள்ளார். மாநில அரசின் செயல்பாட்டை முடக்கும் வகையில் கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு ஆளுநர்கள் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர். ஆளுநருக்கு எதிராகக் கேரள சட்டமன்றத்தில் இதே போன்ற தீர்மானத்தை நிறைவேற்ற பரீசலிப்போம் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுதிய பதில் கடிதத்தில் கூறியுள்ளார். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தொலைபேசி வாயிலாக முதல்வர் ஸ்டாலினுடன் பேசி ஆதரவு தெரிவித்துள்ளார்.

“மாநில முதல்வரின் தலைமையில் இயங்கும் மாநில அமைச்சரவையின் பரிந்துரையின்றி ஆளுநர் எந்த முடிவையும் எடுக்க இயலாது” என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 163 கூறுகிறது. “ஆளுநர் சட்ட மசோதாவை திருப்பி அனுப்பினால் அதை மீண்டும் சட்டமன்றம் நிறைவேற்றினால் அதற்கு ஆளுநர் ஒப்புதல் தந்தே ஆக வேண்டும்” என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 200 கூறுகிறது.

“மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்நிற் பவை” என்ற அய்யன் திருவள்ளுவரின் வரிகளுக்கேற்ப இயற்கையான நுட்ப அறிவோடு நூலறிவையும் ஒருங்கே கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன் எந்த நுட்பமான சூழ்ச்சிகளும் பலிக்காது.

டெல்லி, கேரள முதல்வர்களைத் தொடர்ந்து மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட பா.ஜ.க அல்லாத கட்சிகளைச் சேர்ந்த அனைத்து முதல்வர்களும் அரசியலமைப்புச் சட்டத்தை அவமதித்து ஒன்றிய ஆட்சியாளர்களின் முகவர்களைப் போல செயல்படும் ஆளுநர்களின் அத்துமீறலைத் தடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பின்னால் அணி திரள்கிறார்கள், திரள்வார்கள். மக்களாட்சியின் மாண்பினைக் காக்கும் இந்தப் போரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அணி வெற்றி பெறுவது உறுதி. ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழ்நாடு அமைதிப் பூங்காதான்!

நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டமன்றக் கூட்டத்தொடரில், 20-04-2023 அன்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் கூறினார்.

கடந்த அ.தி.மு.க ஆட்சியில்தான் சட்டம் ஒழுங்கு ‘காணாமல் ‘ போய்விட்டது என்று எடப்பாடியின் கூற்றை மறுத்தார் சில சான்றுகளுடன், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பதால் எப்படி வேண்டுமானாலும் குறை சொல்லலாம் என்பது மரபுக்கு மாறானது. எடப்பாடி முதலில் தன் முதுகில் என்ன இருக்கிறது என்று பார்த்துக் கொண்டு பேசவேண்டும்.

பொள்ளாச்சியில் நிதழ்ந்த கொடுமையான பாலியல் சம்பவத்தின் போது முதல்வராக இருந்தவர் எடப்பாடி பழனிச்சாமி. அதில் அன்றைய ஆளும் கட்சியினருக்கும் தொடர்பு இருந்ததை ஊடகங்கள் வெளிப்படுத்தின. அப்போது எங்கே போனது சட்டம் ஒழுங்கு ?

கொடநாடு பங்களா கொள்ளையில், நிகழ்ந்த தொடர் கொலைகளின் போது முதல்வராக இருந்தவர் எடப்பாடி. அன்று எங்கே போனது சட்டம் ஒழுங்கு? அப்போது அவரின் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த காவல் உதவி ஆணையரிடம் இப்போது சிபிசிஐடி காவல்துறை விசாரணை நடத்தியிருக்கிறது.

அன்று அ.தி.மு.க ஆட்சி காலத்தில் சட்டம் ஒழுங்கை நேர்மையாகப் பராமரிக்காத எடப்பாடி இன்று சொல்கிறார் சட்டம் ஒழுங்கு சரியில்லையாம்.

இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில், புலம் பெயர்ந்த வடநாட்டு பீகார் மக்கள் அடிபட்டு, கொல்லப்படுவதாகச் சில சமூக விரோதிகளால் பரப்பப்பட்ட வதந்தி ‘வீடியோ’ வால் நிகழவிருந்த பெரும் கொந்தளிப்பை மிகச் சாதுர்யமாகக் கையாண்டு சட்டம் ஒழுங்கைக் காத்து, தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக நிலைநிறுத்தியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஜல்லிக்கட்டு, திருவாரூர் தேரோட்டம் என்று பல்வேறு நிகழ்ச்சியின் போதும், பல்வேறு கட்டங்களில் சட்டம் ஒழுங்கைச் சரியாகக் கையாண்டது தி.மு.க வின் இன்றைய அரசு என்பதை எடப்பாடி மறந்தது போல நடிக்கலாம், மக்கள் மறக்க மாட்டார்கள்.

ஆர்.எஸ்.எஸ். நடத்திய அணிவகுப்புப் பேரணிகளால் அமைதி குலைந்த வரலாறு வடக்கே உண்டு.

தமிழ்நாட்டில் வந்ததும் தெரியாது, நடந்ததும் தெரியாது, போனதும் தெரியாது என்ற அளவில் பேரணியை நடக்க வைத்துச் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்திய அரசு தி.மு. கழக அரசு என்பதை மறுக்க முடியுமா?

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசாமல், முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் இருந்து, ஆட்சியைப் பார்த்து எடப்பாடி பாடம் கற்றுக்கொள்வது நல்லது.

“தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்கிறது” என்று நம் முதல்வர் சொல்வது, முற்றிலும் உண்மை!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## நூல் வெளியீடு



கடந்த 08.04.2023 அன்று பேரவைத் தோழர் வெற்றிச்செல்வனின் “ஆபத்தில் கூட்டாட்சி” (பெரியாரியலாளர் வே. ஆனைமுத்து அவர்களின் Federalism in Peril நூலின் தமிழாக்கம்) நூலினைத் திமுக மாணவரணித் தலைவர் தோழர் ராஜீவ்காந்தி வெளியிட, பேரவையின் கொள்கைப் பரப்புச் செயலாளர் தோழர் உமா பெற்றுக் கொண்டார். துணைப் பொதுச்செயலாளர் தோழர் சிங்கராயர் தலைமை வகித்த இந்நிகழ்வில், தோழர்கள் வாலாசா வல்லவன், ஆனை பன்னீர்செல்வம், எட்வின், முத்தையா குமரன், மு.மாறன், தி.க.சு., லோகபாலன், இளங்கோ, செந்தாமரைக் கண்ணன், திராவிடமணி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.



# தன்பாலின ஈர்ப்பும், மாநில சுயாட்சியும்..!

## வெற்றிச்செல்வன்

இக்கட்டுரையினைப் படிக்கும் தோழர்களுக்கு இதன் தலைப்பு சற்று வித்தியாசமானதாக, ஏன் பொருத்தம் அற்றதாகக் கூடத் தோன்றலாம். தன்பாலின ஈர்ப்புக்கும், மாநில சுயாட்சிக்கும் என்ன தொடர்பு என்று! அத்தொடர்பு என்ன என்பதை இக்கட்டுரையில் நாம் பார்க்கலாம்.

தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கக் கோரித் தொடரப்பட்ட வழக்கினை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

இது தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள சான்றுறுதி ஆவணத்தில் *(Affidavit)*, "தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று கோருவது வெறும் நகர்ப்புற மேல்தட்டுப் பார்வை. தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணங்களை ஆதரிப்பதன்மூலம் ஒரு புதிய சமூகத்தை உருவாக்க நீதிமன்றம் முயலக் கூடாது. இந்தப் பணியை நாடாளுமன்றத்திடம் நீதிபதிகள் விட்டுவிட வேண்டும்" என்று கூறியிருக்கிறது. இதற்குப் பதிலளித்த உச்சநீதிமன்றம் 'தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் கோருவது என்பது நகர்ப்புற மேல்தட்டுப் பார்வை என்பதற்கு எந்தவிதத் தரவுகளும் இல்லை என்று சொல்லியதோடு, நீதிமன்றத்தை எப்படி நடத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு சொல்லித் தர வேண்டாம்' என்றும் கண்டித்துள்ளது.

இவ்வழக்கில் ஒன்றிய அரசு மாநில உரிமை குறித்துப் பேசியது உச்சகட்ட நகைச்சுவை. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள 'திருமணம்' என்னும் பொருளானது *(subject)* ஒத்திசைவுப் பட்டியலில் *(Concurrent list)* உள்ளது என்றும், அதனால் இந்த விவகாரத்தில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கருத்தைக் கேட்டறிவது முக்கியமானது என்றும் உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தலைமைச் செயலாளர்கள் பதிலளிக்கக் கோரி அனைத்து மாநிலங்களுக்கும் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

மாநிலங்களின் உரிமையைக் காலில் போட்டு மிதித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய அரசு மாநில உரிமையைப் பேசுவது, சாத்தான் வேதம் ஓதுவது என்று சொல்வதற்கு ஒப்பானது. கல்வியும் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள ஒரு கூறுதானே ? இன்னும் சொல்லப் போனால், மாநிலப் பட்டியலில் இருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட ஒரு பொருள். ஆனால், அதற்கு மட்டும் மாநிலங்களின் கருத்தைக் கேட்டறிவது முக்கியமில்லையா? நீட் தேர்வு, க்யூட் தேர்வு *(CUET)* என்று ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து கொண்டிருக்கிறதே ஒன்றிய அரசு! எல்லாவற்றையும் மாநிலங்களின் கருத்தைக் கேட்டுவிட்டுத்தான் செயல்படுகிறதா ? எனவே தனக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய நிலைப்பாட்டினை எடுத்துக் கொள்ளும் ஒன்றிய அரசின் இரட்டை வேடமே இதில் தெரிய வருகிறது.

2017ஆம் ஆண்டிலேயே உச்சநீதிமன்றம் ஒருவருடைய பால் விருப்பினைத் *(Sexual orientation)* தேர்வு செய்யும் உரிமை அவருக்கு இருக்கிறது என்று தீர்ப்பளித்துள்ளது. 2018இல் ஓரினச் சேர்க்கையைக் கிரிமினல் குற்றமாகக் கருதும் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 377 ஐ ரத்து செய்தது. தொடர்ச்சியாகத் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வரும் தன்பால் ஈர்ப்பாளர்களுக்குச் சொத்துரிமை, இழப்பீடு, காப்பீடு உள்ளிட்ட உரிமைகளைப் பெறுவதற்கான சட்ட அங்கீகாரத்தை அவர்களின் திருமணத்தை அங்கீகரிப்பதன் மூலமாகவே பெற முடியும். உலகில் 30க்கும் மேற்பட்ட நாடுகளில் தன்பால் ஈர்ப்பாளர்களின் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நார்வே, ஸ்வீடன் ஆகிய வளர்ந்த நாடுகளும் இப்பட்டியலில் உள்ளன. எனவே தன்பால் ஈர்ப்பாளர்களுக்கான திருமண உரிமையை சட்டப்பூர்வமாக வழங்குவதே அவர்களும் சமத்துவமாக நடத்தப்படுவதற்கான உத்தரவாதத்தினை அளிக்கும். ●



Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian